Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# நேர்காணல்கள் வெளிப்படுத்தும் நாடகக் கலைஞர்களின் பன்முக ஆளுமைத் திறன்

வி.நித்யா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
ஈரோடு-638012.
மின்னஞ்சல் - pkmnidhya@gmail.com

21

**ஆய்வு நோக்கம்**

நேர்காணல் முறையையும் சிறப்பையும் அறிந்து கொள்வதோடு அவை வெளிப்படுத்தும் நாடகக் கலைஞர்களின் நாடகப் பாங்கின் சிறப்பினையும் அறிதல்.

**ஆய்வுச் சுருக்கம்**

பேட்டி காண்பவர் நேர்காணல் செய்பவரிடம் கேள்விகள் கேட்டுப் பதில்களைப் பெறும் ஓர் உரையாடல் முறையே நேர்காணல் ஆகும். நாடகக் கலைஞர்களை நேர்காணல் செய்வதன் மூலம் அவர்களுடைய ஆளுமை திறனையும் வாழ்க்கை முறையையும் அறிந்து கொள்ளலாம். சமூகத்திற்காகவும் கலைக்காகவும் தங்களை அர்ப்பணித்த பாங்கினை அறிவதோடு அவற்றை இன்றைய தலைமுறையினர்க்கு எடுத்துக்கூறி அக்கலைகளை அழிவிலிருந்து மீட்டெடுக்க முயற்சிக்கலாம்.

**திறவுச் சொல்**

நேர்காணல் - கலைஞர்கள் - கூத்துப் பட்டறை - உந்திச்சுழி - தேவராட்டம் - கூத்து.

**முன்னுரை**

“நேர்காணல் என்கிற வடிவம் எப்போதும் அசாத்தியமானது. ஆளுமைகளைச் சட்டகமிட்டு மாட்டும் ஒருபடித்தானது அல்ல. நுட்பங்களை ‘வாசக மனம்’ என ஒரு பக்கமாக்கும் ஓவியத்துடனும் ஒப்பிட முடியாது. புதிர்த் தன்மைகளை உடைக்கும் ஒரு விளையாட்டு. ஆளுமைகளின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தைப் படிவமாக்கும் ஒரு செய்நேர்த்தி”[1] என்று நீரை மகேந்திரன் காலத்தை வரைந்த தூரிகைகள் என்னும் நூலின் பதிப்புரையில் நேர்காணல் பற்றிக் குறிப்பிடுகிறார்.

“நேர்காணல் (Interview) என்பது கேள்விகள் கேட்டுப் பதில்களைப் பெறும் ஓர் உரையாடல் ஆகும்”[2] என்று மெர்சியம் வெப்ஸ்டர் அகராதி கூறுகிறது. நேர்காணல் என்பது பொதுவாகக் கேள்வி கேட்கும் ஒருவரும் பதில்கள் தருபவர் ஒருவருமாக ஒன்றுக்கு ஒன்று உரையாடலாகவே இருக்கும். நேர்காணல்கள் பல்வேறு துறையில் பல்வேறு வகையில் காணப்படுகின்றன.

“நேர்காணல் என்பது செய்யப்படுபவரின் ஆளுமை மற்றும் அவரது பணிகள் குறித்த தெளிவான ஒரு குறுக்குவெட்டுத் தோற்றத்தை அளிப்பதாக இருக்க வேண்டும்… ஒரு நல்ல இலக்கிய நேர்காணல் என்பது அந்த ஆளுமையின் புதிய வாசகருக்கு அவரை வாசிக்கும் அழுத்தமான உந்துதலைத் தரவேண்டும்.”[3] என்று சி.சரவணகார்த்திகேயன் நேர்காணலுக்கு மேலும் விளக்கம் அளிக்கின்றார்.

நேர்காணல் ஓர் ஆளுமையின் பல்வேறு பரிணாமங்களை வெளிக்கொணரும் தன்மை கொண்டது. ஒரு படைப்பாளி (அல்லது) கலைஞன் நேர்காணல் மூலம் படைப்பில் சொல்ல முடியாத பல விஷயங்களை வெளிப்படைத் தன்மையுடன் பேச முடியும். “ஒரு படைப்பை உருவாக்க படைப்பாளிகளின் வாழ்வும் சூழலும் உதவக் கூடும். படைப்பின் உருவாக்கத்தை அனுபவரீதியாகச் சொல்வதற்கு உதவக்கூடிய பணி நேர்காணலுக்கு உண்டு” [4] என்கிறார் பவுத்த அய்யனார்.

பவுத்த அய்யனாரின் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு கூத்துப் பட்டறை ந.முத்துசாமி, நிஜ நாடக இயக்கம் நிறுவனர் மு.ராமசாமி என்னும் நாடகக் கலைஞர்களின் ஆளுமைத் திறனை இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.

கூத்துப் பட்டறை ந.முத்துசாமி கதைகள் என்றாலே புஞ்சையைப் பற்றித்தான் எழுதவேண்டும் என்ற எண்ணம் உடையவர். “ஊரின் தோற்றம், மனிதர்கள் எல்லாமே மனசிலே பச்சையாய் பதிஞ்சிருந்ததாலே அதைப் பத்தித்தான் எழுத தோணியது”[5] என்று ந.முத்துசாமி நேர்காணலின்போது கூறுகின்றார்.

**தமிழில் முதல் நாடகம்**

டெல்லி தேசிய நாடகப் பள்ளியிலிருந்து நடிகர்கள், இயக்குநர்கள் பலரும் படிப்பை முடித்து வெளிவந்தபோது அவர்களுடன் கோபாலி என்பவரும் வந்தார். மற்றவர்கள் வளைகுடா நாடுகளுக்குச் சென்றபிறகு கோபாலி ‘மிஸ் ஜூலி’ என்று நாடகத்தை நடத்தினார். தமிழில் மேடையேற்றப்பட்ட முதல் ‘அழகான நாடகம்’ மிஸ் ஜூலியை எழுத்துப் பத்திரிகை நிதிக்காக மியூசியம் தியேட்டரில் நடத்தியபோது பெரும் தோல்வி ஏற்பட்டது. இயற்கைச் சூழலில் திறந்த வெளியில் நடத்தப்பட்ட நாடகத்தை மேடையில் நடத்தியபோது சிறப்பாக வரவில்லை’[6] என்று சிறந்த நாடகம் தோல்வியுற்றதை முத்துசாமி குறிப்பிடுகின்றார்.

**நாடக முயற்சி**

‘நடை’ இதழ் தொடங்கப்பட்டபோது பலரும் அவரவர் படைப்புகளை அளித்த போது முத்துசாமி தன் பங்காய் நாடகம் ஒன்றை எழுதுவதற்குப் புஞ்சைக்குச் சென்று யோசித்தார். “ஒரு சம்மந்தமும் இல்லாத ஒரு விஷயம் நாடகம் எழுதத் தூண்டுதலாக இருந்தது. வெளிநாடு ஒன்றில் டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் ஒரு இளம்பெண் திருடினாள். கைது பண்ணினாங்க என்று பத்திரிகையில் வந்தது. இதுதான் அப்போது நாடகம் எழுதுவதற்கான உந்துதல். ‘காலம் காலமாக’ என்ற என் முதல் நாடகத்தை எழுதினேன். ‘நடை’ இதழில் இந்த நாடகம் வெளிவந்தது”[7] என்று தன்னுடைய முதல் நாடக முயற்சியை முத்துசாமி நினைவு கூர்கின்றார்.

“நடன நிகழ்ச்சி, சங்கீதக் கச்சேரி கேட்பது, நடனம் பார்ப்பதுதான் ‘காலம் காலமாக’ எழுதுவதற்கு உதவியது. நடனம், அசைவு, சிற்பம் கிராமத்தில் இருக்கக்கூடிய அசைவுகள் எல்லாம் என் மனதில் ஆழமாய் ஊறிப் போனதால் ‘காலம் காலமாக’ எழுதும்போது அதெல்லாம் உதவியிருக்கிறது”[8] என்று ‘காலம் காலமாக’ என்ற நாடகம் உருவான நிலையை எடுத்துரைக்கின்றார்.

**‘நாற்காலிக்காரர்’ நாடகம்**

நாடகத்திற்கான அசைவுகளைப் புஞ்சையின் அசைவுகளிலிருந்து எடுத்துக் கொண்டதாக முத்துசாமி குறிப்பிடுகின்றார். “மரம். நிலத்தில் பயிர் காற்றில் ஆடுவது, மாடுகள் ஓடுவது, நடந்து

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

போவது, சண்டை போடுவது இது எல்லாம் சேர்ந்துதான் பின்னாட்களில் நாடகம் எழுதுவதைச் சுலமாக்கிவிட்டன. பிறகுதான் 'நாற்காலிக்காரர்' எழுதினேன்" [9] என்று 'நாற்காலிக்காரர்' நாடகம் தோன்றிய சூழலைக் குறிப்பிடுகின்றார்.

**கூத்துப் பட்டறை**

1975இல் நடந்த 'கிராமிய கலை விழாவில் கூத்துக் கலைஞர் புரிசை நடேசத்தம்பிரானின் 'கர்ணமோட்சம்' என்னும் தெருக்கூத்து நாடகத்தை முத்துசாமி தன் மனைவி நண்பர்களுடன் பார்த்தபோது இதுதான் தமிழர்களின் தியேட்டர் என்ற எண்ணம் அவருக்கு உருவானது. முத்துசாமி மூன்று நாடகங்கள் எழுதிய பிறகு நாடக மேடையேற்றம் பற்றிய யோசனை வந்தது. "நவீன நாடகத்தை மேடையேற்ற நவீன நடிகன் அவசியம் என்பதை வீராச்சாமி, ராமகிருஷ்ணன் நண்பர்களும் எண்ணினார்கள். நவீன கவிதை வந்தததைப் போல நவீன நாடகமும் வரவேண்டிய தேவை இருந்தது. அதற்குரிய நடிகனையும் நாமே பயிற்றுவிக்க வேண்டுமானால், அதற்கு ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. நாடகத்திற்கான பயிற்சி செய்து, நாடகத்தை உருவாக்குவது, நாடகத்தை மேடையேற்றத் தேவையான தயாரிப்புகளைச் செய்வது, தொடங்கும் அமைப்பிற்கு என்ன தலைப்பு வைப்பது என்று யோசித்தபோது 'கூத்துப் பட்டறை' என்று வீராச்சாமி கூறியதற்கிணங்க 1977இல் கூத்துப் பட்டறை அமைந்தது'[10] என்னும் நிகழ்வை முத்துசாமி குறிப்பிடுகின்றார்.

**'உந்திச்சுழி' நாடகம்**

ஞான ராஜசேகரின் 'வயிறு' என்ற நாடகம் ஒத்திகை நடந்தபோது முத்துசாமி 'உந்திச்சுழி' என்ற நாடகத்தை எழுதினார். "பெண்கள் முழுச் சுதந்திரமாய் இல்லாமல் போவதற்கு முக்கியமான காரணம் 'கரு'வைச் சுமப்பதால்தான். ஆணுக்கு அந்தப் பிரச்சினையில்லை. உடலுறவின் விளைவுகளைச் சுமப்பது பெண்தான். அதற்குத் தீர்வாக ஒரு நவீன விஞ்ஞானி சொல்கிறான் 'முட்டை' போட்டு அதை ஆணும் பெண்ணும் அடைகாக்க வேண்டும்"[11] என்ற புரட்சிகரமான கருத்தினைக் கருவாகக் கொண்டு 'உந்திச்சுழி' நாடகம் அமைக்கப்பட்டது. கூத்துப்பட்டறை மூலம் தமிழில் மிக நன்றாகக் காட்சிப்படுத்தப்பட்ட முதல் நாடகம் என்று இந்நாடகத்தைக் கூறலாம்.

கூத்துப் பட்டறை – தமிழ்ச் சமூத்தில் ஏற்பட்ட பாதிப்புகள்

கூத்துப் பட்டறையால் நவீன நாடகத்திற்கான விழிப்புணர்வு வந்துள்ளது. நாடகம் நடத்துவதற்கான பொருளாதாரச் சிக்கலை இன்றைக்குச் சமாளிக்கும் திறனைப் பெற்றுள்ளது. மத்திய அரசின் கலாச்சார அமைச்சகம் 14 நடிகர்களுக்கும் ஒரு குருவுக்கும் உதவித் தொகை வழங்குகிறது. புல வருடங்களாக இந்த உதவித் தொகைக்கு விண்ணப்பித்தும் கிடைக்கவில்லை. அவந்தி மேதுரியின் 'கடவுள் தன் பெயரை மாற்றிக் கொண்டார்' என்ற நாடகம் நடத்திய பிறகு அவந்தி மேதுரி 'தமிழ்நாட்ழல் முக்கியமான நாடகக் குழு கூத்துப் பட்டறை' என்று வாஜ்பாயிடம் சொல்லிய பிறகுதான் உதவித் தொகை கிடைத்தது. மு.ராமசாமியின் தேவராட்டத்தைப் பிரச்சாரம் செய்தது கூத்துப் பட்டறை.

**மு.ராமசாமி**

40 ஆண்டுகளாகத் தமிழ் நாடகவெளியில் தீவிரமான இயக்கம் கொண்டவர் மு.ராமசாமி. பேராசிரியர், நாடகக் கலைஞர், எழுத்தாளர், சினிமா ஆர்வலர் எனப் பன்முகம் கொண்ட ஆளுமை. அவரது 'நிஜ நாடக இயக்கம்' இந்திய அளவில் கவனம் பெற்ற ஒன்று. கலைகள், சமூகத்தை விழிப்போடு வைத்திருப்பதற்கான கருவிகள் என நம்பும் மு.ராமசாமியின் 'தோற்பாவை நிழற்கூத்து' பற்றிய ஆய்வு நாட்டார் ஆய்வுத் தளத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது. மதுரைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாட்டில் முதன்முறையாகத் தமிழ்த்துறைக்குக் கீழே நாட்டாரியல் என்ற பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதற்கான விரிவுரையாளராக, நாட்டார் நிகழ்த்துக்கலை ஆய்வுப்புலத்தின் வழியாகக் கல்வித்துறைக்குக்கு வந்த முதல் நபர் மு.ராமசாமி.[12]

**நிஜ நாடக இயக்கம்**

1977 ஜுன் 20-27இல் நவீன நாடகம் குறித்து ஏழு நாள் பயிற்சி முகாம் காந்தி கிராமக் கலாசாரக் கழகம் நடத்தியபொழுது நாடக விற்பன்னர்கள் பலரும் வகுப்பெடுத்தனர். 'நாடகப் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட மு.ராமசாமி மற்றும் அவரின் நண்பர்கள் உருவாக்கும் நாடக இயக்கத்திற்கு 'ரியல் தியேட்டர் மூவ்மெண்ட்' எனப் பெயர் வைப்பதாக முடிவு செய்தனர். 'தமிழ்த்துறையில் பணி செய்து கொண்டு நாடக இயக்கத்திற்கு ஆங்கிலப் பெயர் வேண்டுமோ என்று யோசித்தபோது 'நிஜ நாடக இயக்கம் எனப் பெயர் வைத்து இயங்க ஆரம்பித்தோம்'[13] என்று 'நிஜ நாடக இயக்கம்' எனப் பெயர் அமைந்ததை எடுத்துரைக்கின்றார்.

**நிஜ நாடக இயக்கத்தின் சிறப்புகள்**

1984இல் நடந்த இளம் இயக்குநர்களுக்கான தேசிய அளவிலான சங்கீத நாடக அகாடமியின் நாடக விழாவில், தென்மண்டல நாடகப் பிரிவில் தெலுங்கு, மலையாளம் கன்னடம், தமிழ் என நான்கு மாநிலத்தைச் சேர்ந்த ஆளுமைகளின் நாடகத்தோடு நிஜ நாடக இயக்க நாடகமும் போட்டியிட்டது. பெங்களூரில் நடந்த அவ்விழாவில் 'துர்கிர அவலம்' நாடகம் தேசிய நாடக விழாவுக்குத் தேர்வானது. 'தில்லியில் நடைபெற்ற விழாவில் 'துர்கிர அவலம்' நாடகத்தைப் பற்றிப் பலரும் சிலாகித்தனர். தேசிய அளவில் எங்கள் நாடக இயக்கத்திற்கு அங்கீகாரமும் கவனமும் கிடைத்தன. நிஜ நாடகத்துக்கு அது ஒரு மைல் கல்லாக அமைந்தது'[14] என்று கூறுகிறார் மு.ராமசாமி. மேலும், பல்வேறு கலை வடிவங்கள் 'துர்கிர அவலம்' என்னும் புதுமையான நிகழ்த்துதலுக்கு உதவின என்பதை, "ஓம் பெரியசாமியிடம் கற்றுக் கொண்ட கரகாட்டம், கோடாங்கிப்பட்டியில் கற்றுக் கொண்ட தேவராட்டம், புரிசையில் கற்றுக் கொண்ட தெருக்கூத்து, ஆய்வு காலத்தில் கற்றுக் கொண்ட தோற்பாவை நிழற்கூத்து என் மனதிலும் உடலிலும் பதிந்து போயிருந்த கலைவடிவங்களின் ஒரு ஒருங்கிணைந்த வடிவமாக 'துர்கிர அவல'க் கதை வடிவமைந்திருந்தேன்"[15] என்று விளக்குகின்றார்.

யாதவ் கல்லூரியில் 'கார்ல்மார்க்ஸைவிட கடவுள் இல்லை என்று சொன்ன பெரியார் தான் இவர்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிறார் என்று யாதவ் கல்லூரியில் பகுத்தறிவியல் என்று ஒரு பாடத்திட்டம் இருந்தது. அதை முன்னிறுத்தி கலகக்காரர் தோழர் பெரியார் என்ற நாடகத்தை மெள்ள மெள்ள வளர்த்தெடுத்து 'நிஜ நாடக இயக்கம்' மூலமாக மக்களிடம் சென்று சேர்த்தோம்.'[16] என்று கலகக்காரர் தோழர் பெரியார்' என்னும் நாடக உருவாக்கத்தை விளக்கிக் கூறுகிறார்.

கோ.ராஜாராம் மொழிபெயர்த்துத் தந்த பாதல் சர்க்காரின் களரி தொடர்பான ‘ஸ்பார்ட்டகஸ்’, குஜராத் கலவரத்தை விமரிசத்து நிகழ்த்திய ‘கட்டுண்ட பிரமோகியஸ்’, அறிவியலின் முன் மதம் மண்டியிட்ட சம்பவத்தை முன்வைத்து எழுதப்பட்ட பெர்டோல்ட் ப்ரெக்ழன் ‘கலிலியோ கலீலி’, நந்தன் கதை, தோழர்கள் முழுக்க திருநங்கைகளைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட ‘வலியறுப்பு’ போன்ற நாடகங்கள் நிஜ நாடக இயக்கத்தின் முக்கியமானவை ஆகும்.

நாடகக் கலையில் சாதிய மேலாதிக்கம்

சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதும்போது அடியார்க்கு நல்லார் நான்கு வர்ண அடிப்படையிலான நாடகங்களை வகைப்படுத்துகிறார். “முதல் வர்ணத்தவருக்கு அறம், பொருள், இன்பம், வீடு என நான்கும் கொண்ட நாடகம். இரண்டாவது வர்ணத்தவருக்கு அறம், பொருள், இன்பம் மூன்றும் கொண்ட பிரகரணம் எனும் நாடக வடிவம். மூன்றாவது வர்ணத்தவருக்கு அறம்இ பொருள் இரண்டும் கொண்ட பிரகரணப் பிரதரணம் என்னும் நாடக வடிவம். நான்காவது வர்ணத்தவருக்கு அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ‘அறம்’ ஒன்றை மட்டுமே கொண்ட ‘அங்கம்’ எனும் நாடகம்.”[17] என்று நான்கு வர்ணத்தாருக்கும் அமைந்த நாடக வடிவங்கள் குறிக்கப்படுகின்றன.

**முடிவுரை**

நாடகக் கலைஞர்கள் தங்களுடைய நாடகங்கள் வெற்றி பெறுவதற்குப் பெரு முயற்சியை மேற்கொண்டனர். நாடக அமைப்பான கூத்துப் பட்டறை, நிஜ நாடக இயக்கம் மூலமாக நடத்தப்பட்ட நாடகங்கள் மக்கள் மத்தியில் பரவலான ஆதரவைப் பெறுவதற்கு நாடகக் கலைஞர்களின் பன்முக ஆளுமைத் தன்மையே காரணமாக அமைந்தது எனலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. பவுத்த அய்யனார், காலத்தை வரைந்த தூரிகைகள், நீரை மகேந்திரன், பதிப்புரை, ப.5.
2. Merriam Webster Dectionary, Interview, Dictionary Definition Retrived, February, 2016.
3. சி.சரவணகார்த்திகேயன், மும்மூர்த்திகள், முன்னுரை, ப.9.
4. பவுத்த அய்யனார், அலையும் நினைவுகள், பின் அட்டைக் குறிப்புஃ
5. பவுத்த அய்யனார் (சந்திப்பும் தொகுப்பும்), காலத்தை வரைந்த தூரிகைகள், ப.18.
6. மு.கு.நூல். ப.38
7. மு.கு.நூல். ப.41
8. மு.கு.நூல். ப.41
9. மு.கு.நூல். ப.42.
10. மு.கு.நூல். ப.43.
11. மு.கு.நூல். ப.45
12. நேர்காணல்:மு.பெரியசாமி, சந்திப்பு வெய்யில், “முரண்தான் நாடகம் மீறல்தான் கலை!”, விகடன் தடம், ஆகஸ்ட் 2018, ப.11.
13. மு.கு.இதழ். ப.11-12

14. மு.கு.இதழ். பக்.13.
15. மு.கு.இதழ். ப.14.
16. மு.கு.இதழ். ப.21.
17. மு.கு.இதழ். பக்.23-24.

**துணைநூற் பட்டியல்**


1. சரவணகார்த்திகேயன், மும்மூர்த்திகள், கிழக்கு பதிப்பகம், 177/103, அம்பாள்ஸ் பில்டிங், லாய்ட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-600014, டிசம்பர் 2019.
2. பவுத்த அய்யனார் (சந்திப்பும் தொகுப்பும்), காலத்தை வரைந்த ஓவியங்கள், நேர்காணல் இதழின் நேர்காணல்கள், துருவம் வெளியீடு, எண்.5. கம்பர் தெரு, ஆலந்தூர், சென்னை-600016, டிசம்பர் 2021.
3. பவுத்த அய்யனார், அலையும் நினைவுகள், (நேர்காணல்கள்), மீனாள் பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை-600103, முதல் பதிப்பு 2010.
4. விகடன் தடம், 757 அண்ணாசாலை, சென்னை-600002, ஆகஸ்ட் 2018,
5. Merriam Webster Dectionary, Interview, Dictionary Definition Retrived, February, 2016.